# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2019 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2019.05.17 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## மாகாண சபைகள்
## (திருத்தம்)

**1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## சட்டப்பயன்பற்றிய கூற்று

*__வாசகம் 2 :__ இவ்வாசகம், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டம், (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம் என்பனவற்றின் பெறுகைகள் தவிர்ந்த வேறு மாகாண சபையின் மற்றெல்லாப் பெறுகைகளின் கொடுப்பனவுக்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.*

**மாகாண சபைகள்**
**(திருத்தம்)**

*ச.வ. - ஒ. 64/2016*

## *1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தின் 19 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஈ) (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டம், (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம் ஆகியவற்றின்கீழ் முறையே மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபையின் பெறுகைகள் தவிர்ந்த வேறு மாகாண சபையின் மற்றெல்லாப் பெறுகைகள்."

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.